05.09.2024
அசல் வழக்கு எண்: 29/2022

வா.சா.2 சாட்சி தமிழ்செல்வி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.2 ஆவணம் பவர் பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி சா.சா.ஆ.2 ஆவணத்திற்கான அசல் ஆவணம் தான் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட பவர் ஏஜெண்ட் செல்லம் என்பவர் இன்சியல் போடாமல் செல்லம் என்று மட்டும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2வது வரியில் பூச்சம்மாள் கணவர் பெயரில் "பொன்னையா நாயக்கர் என்ற" என்று பேனாவால் இடைச்செறுகளாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 2வது தாளில் பின்புறம் முதல் புகைப்படமான A. செல்வம் என்பவருடைய புகைப்படத்திற்கு அருகிலும், மூன்றாவது புகைப்படமான அழகர் என்பவருடைய புகைப்படத்திற்கு அருகிலும் அவர்களது தகப்பனார் பெயர் பெருமாள் நாயக்கர் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், பொன்யைா நாயக்கர் என்று சொல்லப்படவில்லை என்றாலும் சரிதான்.

அதே போன்று மூன்றாவது பக்கத்தில் சொத்து விவரத்தில் 2வது வரியில் " தென்புறம் கார்த்திகேயன் கிரையம் பெற்ற செண்ட் 35 போக" என்ற வரி இடைச்செறுகலாக பேனாவில் எழுதி சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது பக்கத்திலும், 3வது பக்கத்திலும் திருத்தம் செய்யப்பட்டிருக்கும் இடத்தில் எங்களது அலுவலகத்தை சேர்ந்த நபர்கள் யாரும் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லை. பூச்சம்மாள் என்ற

நபரை நான் நேரிடையாக பார்த்தது இல்லை என்றாலும், தரப்பினர்கள் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.3 ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ள செல்லம் என்பவர் " ப. செல்லம்" என்று தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 3வது பக்கத்தில் ப.செல்வம் என்று கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால், அது "ல" வா அல்லது "வ" வா என்று தெளிவாக தெரியவில்லை. மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட செல்லம் என்பவருடைய கையெழுத்துகள் ஒரே மாதிரி உள்ளதா அல்லது வெவ்வேறு மாதிரி உள்ளதா என்றால் வித்தியாசம் இருப்பது போல் தெரிகிறது. பொதுவாக பத்திரங்களில் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்வார்களா அல்லது வெளியே வைத்து கையொப்பம் செய்து கொண்டு வருவார்களா என்றால் கையொப்பம் பெற்றுவிட்டு தான் கொண்டு வருவார்கள். மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்தது பவர் ஏஜெண்ட் செல்லம் தானா என்பது பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.4 ஆவணமும் வா.சா.ஆ.5 ஆவணமும் ஒரே ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட கிரைய ஆவணத்தின் நகலில் 2வது பக்கத்தில் 6,7 நபர்களுக்கு பாத்தியப்பட்டு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் சாட்சிகள் பெயரும், தயாரித்தவரின் பெயர் மற்றும் லைசென்ஸ் நம்பரும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சாட்சிகள் பெயரும், தயாரித்தவரின் லைசென்ஸ் நம்பரும் தெளிவாக உள்ளது. தயாரித்தவரின் பெயர் சரியாக தெரியவில்லை. ஆனால் சொல்லப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சா.சா.ஆ.4 ஆவணத்தில் அசல் கார்த்திகேயனிடம் தான் இருக்கும் என்று எதனடிப்படையில் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆவணத்தில் அவருடைய பெயர் இருந்ததால் அவ்வாறு சொன்னேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரம் எனக்கு சரியாக தெரியாது என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை

பொதுவாக பத்திரம் பதிவு செய்த பிறகு நாங்களே வைத்து கொள்வோமா அல்லது பதிந்த நபரிடம் கொடுத்துவிடுவோமா என்றால் கொடுத்துவிடுவோம். ஒரு நபர் பல தாள்களில் கையொப்பம் செய்யும் போது கையெழுத்து சிறிதளவு மாற வாய்ப்புள்ளது என்றால் அது பற்றி தெரியாது. பொதுவாக பத்திரத்தை பதிவு செய்வதற்கு முன்பாக பெயர், சொத்து விவரம், சர்வே நம்பர் போன்ற விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை பார்த்து தான் பதிவு செய்வார்கள் என்றால் அவ்வாறு தான் பதிவு செய்ய வேண்டும். ஆனால் அப்போது எவ்வாறு பதிந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1வது தாளின் பின்புறத்தில் பூச்சம்மாள் என்பவருடைய புகைப்படத்திற்கு அருகில் பொன்னையா நாயக்கர் என்ற பெருமாள் நாயக்கர் மனைவி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பொதுவாக வரி சேர்ப்பு மற்றும் வரி பிளவு போன்றவை எங்கள் அலுவலகத்தில் வழக்கில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 2வது பக்கத்தில் கடைசியில் 2வது வரியில் திருத்தம் செய்யப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போன்று 3வது பக்கத்தில்

கடைசியில் 16வது வரியில் தெ முதல் க வரை திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.4 ஆவணத்தின் தயாரித்தவரின் உரிமம் எண் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் எண் குறிப்பிடப்பட்டுள்ளது. தயாரித்த நபரை விசாரித்தால் தான் ஆவணத்தின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.